21 JUL 2004
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொது கலைமாணித் தேர்வு பகுதி – I 1999/2000 (வெளிவாரி) (டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

## PS 201 இலங்கையின் அரசியல் யாப்பு வளர்ச்சியும், சுதந்திரத்திற்குப் பிந்திய அரசாங்கங்களும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. (அ) "தேசியவாதம்" என்ற எண்ணக்கருவை விளக்குக.

(ஆ) "இலங்கைத் தேசிய காங்கிரசின் வளர்ச்சியை தளர்ச்சியடையச் செய்வதில் ஆள்பதி மனிங் வெற்றி கண்டார்" இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்கு காரணங்கள் தருக.

02. இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியில் கோல்புறுக்கமரன்(1833) சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

03. (அ) டொனமூர் அணைக்குழு நடைமுறையில் இருந்த அரசியலமைப்பில் கண்டறிந்த குறைபாடுகள் எவை?

(ஆ) டொனமூர் ஆணைக்குழு முன்வைத்த முக்கிய சிபார்சுகளை சுருக்கமாக விளக்குக.

04. (அ) "பாராளுமன்ற சட்டவாக்கத் தத்துவம்" என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?

(ஆ) சோல்பரி அரசியலமைப்பின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்றம் கொண்டிருந்த சட்டவாக்கல் தத்துவத்தினை மதிப்பிடுக.

05. (அ) சோல்பரி அரசியலமைப்பில் விதந்துரைக்கப்பட்ட சிறுபான்மையோர் காப்பீடு ஏற்பாடுகள் எவை?

(ஆ) "சிறுபான்மையோர் காப்பீடுகள், நடைமுறையில் சிறுபான்மையோர் உரிமைகளைப் பாதுகாப்பதில் வெற்றியடையவில்லை" இக்கூற்றை மிக நுணுக்கமாக நுணுகி அராய்க.

06. (அ) "நீதித்துறை சுதந்திரம்" என்றால் என்ன?

(ஆ) 1972, 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்புக்களில் நீதித்துறை சுதந்திரம் எவ்வாறு பேணப்பட்டுள்ளது என்பதை யாப்பு ஏற்பாடுகளை ஆதாரம் காட்டி விளக்குக.

07. (அ) சோல்பரி யாப்புக்குப் பதிலாக, புதியதொரு யாப்பினைத் தோற்றுவிப்பதில் இலங்கையில் எழுந்த அரசியல் சர்ச்சைகளை அடையாளப்படுத்துக.

(ஆ) 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பில் அரசியலமைப்பு நீதிமன்றம் கொண்டிருந்த அதிகாரங்களை மதிப்பிடுக.

08. ஜனாதிபதி எதிர் பாராளுமன்றம் என்ற நிலையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தின் மீது செய்யத்தக்க கட்டுப்பாடுகளையும், பாராளுமன்றம் ஜனாதிபதி மீது செய்யத்தக்க கட்டுப்பாடுகளையும் இரண்டாம் குடியரசு யாப்பு உறுப்புரைகளை சுட்டிக்காட்டி விளக்குக.

09. "இலங்கையின் இனமுரண்பாட்டின் தீர்வுக்கு இனவாத அரசியல் தடையாக அமைந்துள்ளது." இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடையை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.

10. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) தமிழர்விடுதலைக் கூட்டணியும் தலைமைத்துவப் போட்டியும்
(ஆ) ஜே.வி.பியின் அண்மைக்கால அரசியல் செயற்பாடுகள்
(இ) இனமுரண்பாட்டில் நோர்வே அரசாங்கத்தின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
(ஈ) விகிதாசாரப் பிரதிநிதித்துவம்

*******